2. வினாக்கள் — விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னை நகர குடிசை வாழ் மக்களுக்கு நில ஒதுக்கீடு.

குறுகிய கால வினா எண் 43—திரு. கே. பண்ணை சேதுராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரத்தில் குடிசைப் பகுதியில் வாழக் கூடிய குடிசைவாசிகள் ஒவ்வொருவருக்கும் 40 சதுர அடி ஒதுக்கி அதற்கான கிரயத்தை மாதம் ரூ. 20 வீதம் பிடித்துக் கொள்வதற்கான திட்டம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ): இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே உள்ள மக்களில் 40 சதவீத மக்கள் குடிசைப் பகுதியிலே வாழ்கிறார்கள். அவர்களில் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் சாக்கடை ஓரங்களில் புழுக்களாகத் துடிப்பவர்களும், சாலை ஓரங்களிலே வேலையில்லாமல் திரிபவர்களும் 40 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள். பம்பாய் குடிசைப் பகுதியிலே 8 சதவிகிதம் வாழ்கிறார்கள். கல்கத்தா குடிசை பகுதியிலே 20 சதவீதம் வாழ்கிறார்கள். இந்தக் குடிசைப் பகுதியிலே உள்ளவர்களுக்கு 20 ரூபாய் கொடுக்க அரசு எப்போது இருந்து திட்டம் கொண்டுவர இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதோடு சென்னை நகரத்திலே கொண்டுவர இருக்கிற இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களுக்கும் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணை தலைவர் அவர்களே, என் பதில் ‘ இது அரசின் ஆய்வில் உள்ளது’ என்று கூறியிருக்கிறேன். இப்போது இதற்கு மேலே எந்தத் தகவலையும் தரும் நிலையில் இல்லை.